[2009 ஜூலை 3

86—

விளையாட்டரங்கம்

***505—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத்திற்கு ஒரு விளையாட்டரங்கம் உள்ளதுபோல், வட்ட அளவிலும் விளையாட்டரங்குகளைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

மாவட்டத்திற்கு ஒரு விளையாட்டரங்கம் உள்ளதுபோல், வட்ட அளவிலும் விளையாட்டரங்குகளைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. எனினும், வட்ட அளவில் மினி விளையாட்டரங்குகள் அமைக்க தகுதி மற்றும் தேவைக்கேற்ப அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் இப்பொழுது அனைத்து வசதிகளுடன்கூடிய விளையாட்டரங்கங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அதைப்போல நமது உள்ளாட்சித் துறையின் சார்பாக அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பள்ளி மைதானங்களும் அதைப்போல சமுதாய விளையாட்டு மைதானங்களும் அமைக்கப்பட்டு அவையும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. ஆனால், மிகுந்த தரமுள்ள விளையாட்டு மைதானங்களைப் பயன்படுத்த வேதாரண்யத்திலிருந்து 40 கிலோ மீட்டர் தூரம் நாகப்பட்டினத்திற்கு வர வேண்டும். வட்டத் தலைநகரங்களில், அதைப்போல ஒன்றியங்களில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்ற அளவில் விளையாட்டு மைதானங்களை ஏற்படுத்தும்பொழுது, பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்கள் அவற்றைப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. அந்தவகையிலே அதை உடனடியாக செய்து தர வேண்டுமென்று

2009 ஜூலை 3]

கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு பிரச்சினை அதிலே இருக்கிறது. ஊராட்சி ஒன்றியஅளவிலும் அதேபோல வட்ட அளவிலும் நிலம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அதைப்போன்ற நேர்வுகளில் ஏற்கெனவே அரசுப் பள்ளிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களைப் பயன்படுத்தி அவற்றை மேம்பாடு செய்யலாமா என்பதையும் அரசு சிந்திக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், ஓர் உள் விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் உருவாக்கப்பட வேண்டும் என்பது இந்த அரசினுடைய கொள்கையாக இருந்து வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் மேற்படி விளையாட்டு வசதிகளை ஏற்படுத்திய பின்னர், அந்தந்த மாவட்டங்களின் முக்கிய நகரங்களில் உள்ள விளையாட்டிற்கான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-15

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களில் உள்ளதுபோல, தாலுகாக்களிலும் மினி விளையாட்டரங்கங்கள் அமைக்க அனுமதியளித்ததன்பேரில், இதுவரை 17 தாலுகாக்களில் மினி விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 7 மினி விளையாட்டரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 7 மினி விளையாட்டரங்கங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2 மினி விளையாட்டரங்கங்கள் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. ஒரு மினி விளையாட்டரங்கம் கட்டுவதற்கானப் பணியைத் தொடங்குவதற்கு நுழைவு அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வேதரத்தினம் அவர்கள் சொன்னதுபோல, விளையாட்டுத் துறைக்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. முறையான, தகுதியான விளையாட்டு வீரர்கள் விளையாடுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல,

[2009 ஜூலை 3

இதுவரை இந்தியாவிலேயே இல்லாத ஒரு திட்டமாக, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய், அல்லது பள்ளிக்கூடமாக இருந்தால், ஒன்றரை இலட்சம் ரூபாய் என்ற அளவில் நிதியை ஒதுக்கி, விளையாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்து, கிட்டத்தட்ட 1,261 ஊராட்சிகளிலும் அதைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று, 5 வருடங்களில் பணிகளை முடிப்பதற்குத் தகுந்தாற்போல், 3 வருடப் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. இது ஒரு மிகப் பெரிய, சிறந்த திட்டம்.

விளையாட்டரங்கம் ஒன்றிய அளவிலே கிடைக்குமா என்று உறுப்பினர் கேட்கிறார். நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய திட்டம் தவிர, இப்போது மத்திய அரசு "பைக்கா" என்ற பெயரால் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறது. மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து, கிட்டத்தட்ட எல்லா ஒன்றியங்களுக்கும் ஒரு ஒன்றியத்திற்கு 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்துகின்ற அந்தத் திட்டத்தில் முதற்கட்டமாக 38 ஒன்றியங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், ஏனைய மாமன்ற உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, விளையாட்டுத் துறையின்மூலமாக எல்லா கிராமங்களிலும் விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படுகின்றன. அதுபோல எல்லா ஒன்றியங்களிலும் அமைக்கப்படவிருக்கின்றன. எல்லா விளையாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, கல்வி எவ்வளவு முக்கியமோ அதுபோல, விளையாட்டும் முக்கியம் என்று இந்த அரசு புரிந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் 38 ஒன்றியங்களில் இதுபோன்ற விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட உள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். அதில் வேதாரண்யமும் உண்டா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

2009 ஜூலை 3]

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒன்று என்பதை நாமாகப் பகிர்ந்துகொள்ளலாம். அந்த அடிப்படையில், உங்கள் மாவட்டத்திலே எந்தப் பகுதியில் அமைப்பது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளலாம். மினி விளையாட்டரங்கம் அமைப்பதிலே, உங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே தரங்கம்பாடியில் ஒரு மினி விளையாட்டரங்கம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே உங்களுடைய மாவட்டத்தில் உள்ள திட்டச்சேரியில் கடற்கரை கையுந்துப் பந்து மையத்தை கிராம விளையாட்டுப் பயிற்சி மையமாக அறிவித்து, அதை நானே வந்து தொடங்கிவைத்ததையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

87—

பாலம்

***10136—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் பாலாற்றின் குறுக்கே உடைந்துபோன பழைய பாலத்திற்குப் பதிலாகப் புதிய பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூரில் பாலாற்றின் குறுக்கே உடைந்துபோன பழைய பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் பணிக்கு மைய அரசின் மாநிலங்களை இணைக்கும் சாலைத் திட்டத்தின்கீழ் ரூ.16.01 கோடி மதிப்பில் மைய அரசு ஒப்புதல் பெற்று, 28-2-2008 முதல் பணிகள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. மார்ச் 2010-க்குள் பணிகளை முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.